செ.வெ.எண் : 14/ செப்டம்பர்　　　　　　　　　　　　　　　　　　நாள் : 07-09-2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## முன்னாள் படைவீரர்கள் / படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 12-09-2017 அன்று நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள் / படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் **12-09-2017 அன்று பிற்பகல் 03.30 மணிக்கு** இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. முன்னாள் படைவீரர்கள் / படைவீரர்கள் மற்றும் அவர்தம் சார்ந்தோர்கள் தமது கோரிக்கை மனுக்களுடன் நேரில் வருகை தந்து பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**